In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No. 163/2023 | Prosecution witness P.W.23
Name: Alexandar | Calling:
Father Name: | Religion:
Village: | Caste:
Taluk: | Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 22-07-2025.

**(A1 produced on V.C. A2 died. A3 to 9 absent.petition u/s 355 BNSS. filed and allowed,)**

முதல் விசாரணை :-

நான் தற்சமயம் தாடிக்கொம்பு காவல்நிலையத்தில் சிறப்பு சார்பாய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 20.07.2023ம் தேதி திண்டுக்கல் நகர் வடக்கு காவல்நிலையத்தில் எஸ்.எஸ்.ஐ ஆக பணிபுரிந்தபோது அண்ணா நகர் பீட்டில் பணியிலிருந்தபோது எனக்கு19.15 மணிக்கு கிடைத்த தகவலின்படி விமலா மருத்துவமனை சாலையில் ஒருவர் இறந்துகிடப்பதாக தகவல் கிடைத்து நான் அங்கு சென்று பார்த்தபோது அங்கு கூட்டமாக இருந்தது. அவர்களை கலையும்படி சொல்லி பார்த்ததில் இறந்து கிடந்த நபர் காவல்நிலைய சரித்திரப்பதிவேட்டில் இடம்பெற்ற சரவணன் என்ற பட்டறை சரவணன் என தெரியவந்தது. உடனே நான் ஆய்வாளருக்கு தெரியப்படுத்தி அவரது அறிவுறையின்படி தனியார் ஆம்புலன்ஸ் அமர்த்தி இறந்து கிடந்த சரவணனின் பிரேதத்தை ஏற்றி திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டுசென்றேன். மருத்துவரிடம் பிரேதத்தை அடையாளம் காட்டி இறப்பை உறுதி செய்து பின்னர் பிரேதத்தை சவக்கிடங்கில் வைக்க உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

1 முதல் 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-

அன்றைய தினம் அண்ணா நகர் பகுதியில் நான் பணிபுரிந்தேன் என

காட்டுவதற்கு ஆவணம் எதையும் ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பிரேதம் கிடந்த இடத்திலிருந்து திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு 15 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். யார் மூலமாக எனக்கு தகவல் கிடைத்தது என்பதை ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 15, 20 நிமிடத்தில் ஆம்புலன்சில் திண்டுக்கல் அரசு மருத்துவமனை கொண்டுசென்றுவிட்டேன் என்றால் சரிதான். ஆம்புலன்ஸ் யாருக்கு பாத்தியப்பட்டது, அந்த ஆம்புலன்சை ஓட்டியது யார் என ஆய்வாளரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA Digitally signed by A MUTHUSARATHA Date: 2025.07.22 15:13:12 +0530

Principal District Judge,
Dindigul.